# பிலிவர்ஸ் ஈஸ்டன் சர்ச்

Office of the Metropolitan, Synod Secretariat, St. Thomas Community, Thiruvalla, Kerala, India.

## மேய்ப்பரின் மடல்

சகல பேராயர்கள் மற்றும் ஆயர்கள், அருட்தந்தையர்கள், திருத்தொண்டர்கள், நற்செய்தியாளர்கள், சகோதரிகள் மற்றும் பிலிவர்ஸ் ஈஸ்டன் சர்ச்சின் உலக முழுவதும் இருக்கும் விசுவாசிகள் அனைவருக்கும், பிதா, குமாரன், தூய ஆவியானவரின் திருநாமத்தினால் ஆசீர்வாதத்தையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆமென். ✝

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

நாம் இயேசு கிறிஸ்துவானவரின் உருமாற்ற திருவிழா காலத்துக்குள் பிரவேசித்துள்ளோம். நாம் எமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவானவரின் உருமாற்றத்தை நினைவுகூர்ந்து, அதை கொண்டாடும் சந்தர்ப்பத்தில், (புனித மத்தேயு 17:1-8) அவருடைய உன்னத மகிமையானது வெளிப்படுத்தப்படுகின்றது. எமது ஓர்தோடொக்ஸ் கிறிஸ்தவ வாழ்க்கையின் இலக்கானது, இன்னும் அதிகமாக இறைவனுடைய திவ்ய சுபாவத்திற்கு மாற வேண்டும் என்பதையே இந்த காலம் எமக்கு நினைவுப்படுத்துகின்றது. (2 கொரிந்தியர் 3:18) இந்த செயற்பாட்டை பொதுவாக “தெய்வீக சுபாவத்திற்கு மாறுதல்” அல்லது ‘‘தியோசியஸ்’’ என்று அறியத்தருகின்றது. ஆனாலும், நாம் இதை எவ்வாறு அடைவது?

1. **இயேசு கிறிஸ்துவானவர் எமது அளவு கோலாக இருக்க வேண்டும்.**

ஆரம்ப கால விசுவாசிகள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள், (திருத்தூதர் பணிகள் 12:26) காரணம் அவர்கள் மிகவும் தயவுள்ளவர்களாக வாழ்ந்தார்கள். உண்மையாகவே, ஆதித்திருச்சபை பிதாவும் பேராயருமான புனித இக்னேஷியஸ் அடிகளார் இறைவனை தாங்கிச் செல்பவர் என்று தன்னை அறிமுகப்படுத்தினார். இன்று எம்மை சுற்றியுள்ள மக்கள் எம்மை மிகவும் அவதானமாக ஆராய்ந்து பார்த்தால், அவர்கள் எங்களை எப்படி அழைப்பார்கள்? அவர்கள் எம்மை புறங்கூறுகின்ற, கோபக்கார, பண ஆசை பிடித்த, கலகக்கார, பெருமை கொண்ட, அல்லது தயவற்றவர்கள் என அழைப்பார்களா? அல்லது கிறிஸ்தவர்கள் என்று அழைக்க நாம் உண்மையாகவே தகுதியானவர்களாக இருக்கின்றோமா?

எமது அணுகுமுறை மற்றும் நடத்தை கிறிஸ்துவானவருக்கு ஒப்பானதாக இல்லாததததைக் குறித்து பல்வேறு காரணங்களை முன்வைக்க எம்மால் முடியும். ஆனாலும், இயேசு கிறிஸ்துவானவரே எமது முன்மாதிரியாக இருக்க வேண்டும். “ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவானவரே, உம்மைப் போல் மாறுவதே எனது விருப்பமாகும். அப்பொழுது உங்களுடைய திருநாமத்திற்கு

கனத்தை பெற்றுக்கொடுக்க என்னால் முடியும்" என்பதே எமது ஆழமான விருப்பமாக இருக்க வேண்டும். இதன் மூலம் அர்த்தப்படுத்தப்படுவது என்னவென்றால், நாம் எமது கலாச்சாரம், குடும்ப பின்னனி, எமது கடந்த கால தோல்விகள் மற்றும் வேறு நபர்களின் பெலவீனமான முன்மாதிரிகளை எமது தவறான நடத்தைகளுக்கான காரணமாக பயன்படுத்தக்கூடாது என்பதேயாகும். மேலும், நாம் தோல்வியடையும் எல்லா சந்தர்ப்பங்களிலும் ''*ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவானவரே, இறைவனுடைய குமாரனே, பாவியாகிய என் மேல் இரக்கமாயிரும்.*'' என்ற கிறிஸ்துவானவருடைய மன்றாட்டை மன்றாட வேண்டும்.

**2. மற்றவர்கள் என்ன செய்தாலும், இயேசு கிறிஸ்துவானவரின் தூய திருவார்த்தைக்கு கீழ்ப்படிய நாம் தீர்மானிக்க வேண்டும்.**

"நீங்கள் என் மீது அன்பு கொண்டிருந்தால், என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள்" (புனித யோவான் 14:15) என்று இயேசு கிறிஸ்துவானவர் கூறினார். ஆகையால், இறைவன் மேல் கொண்டிருக்கும் எமது அன்பை அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதன் மூலம் காண்பிக்க வேண்டும். மற்றவர்கள் புறங்கூறும் போது, நாம் அவர்களோடு சேராதிருப்போமாக. அவர்கள் அதிகாரத்திற்கு கீழ்ப்படியாமல் போனால் அல்லது, விமர்சனமான மனப்பான்மையை வெளிப்படுத்துபவர்களானால், அவர்களோடு எவ்விதத்திலும் பங்காளர்களாக இருக்கக்கூடாது. ஏன்? ஏனெனில், இறைவன் எமக்கு வழங்கியிருக்கும் அவருடைய ஆலோசனைகளை பின்பற்ற எம்மை தேர்ந்தெடுத்திருக்கின்றதால், திருமறையில் உள்ளபடி, நாம் உபவாசம் இருக்கின்றோம், தர்மங்களை செய்கின்றோம், பிரார்த்தனை செய்கின்றோம்.

**3. தீய சகவாசங்களை (தீயவர்களோடு பழகுவதை) கைவிட வேண்டும்.**

"உங்கள் நண்பர்கள் யார் என்பதை எனக்கு சொல்லுங்கள், அப்பொழுது நீங்கள் யார் என்பதை நான் உங்களுக்கு சொல்லுவேன்" என்ற ஒரு பழைமையான பழமொழி உள்ளது. எமது நெருங்கிய நண்பர்கள் யார், அல்லது நாம் யாருடன் கூடுதலான நேரத்தை செலவிடுகின்றோம் என்பது முக்கியமானதல்ல என்று நாம் நினைக்கின்றோம். ஆனாலும் அது எதிரியின் மிகவும் சக்திவாய்ந்த ஏமாற்றங்களில் ஒன்றாகும். நாம் பழகுகின்றவர்களின் எதிர்மறையான நடத்தை, விமர்சன மனப்பான்மை மற்றும் கலகக்கார அணுகுமுறைகளின் மூலமாக, நமக்குள் சிறிது சிறிதாக நச்சுத்தன்மையை ஏற்றுகின்றது. "அன்பர்களே, எங்களிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொண்ட முறைமையின்படி ஒழுகாமல் சோம்பித்திரியும் எல்லாச் சகோதரர் சகோதரிகளிடமிருந்தும் விலகி நில்லுங்கள் என, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் நாங்கள் உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்" (2 தெசலோனிக்கேயர் 3:6) என்று புனித பவுலடியார் கட்டளையிடுகின்றார். "நீங்கள் ஏமாந்து போகவேண்டாம். தீய நட்பு நல்லொழுக்கத்தைக் கெடுக்கும்." (1கொரிந்தியர் 15:33).

கிறிஸ்துவுக்குள் அன்பான பிள்ளைகளே, உருமாற்ற திருவிழாவை கொண்டாடும் இச்சந்தர்ப்பத்திலும்கூட, நாம் இறைவனுடைய குமாரராகிய இயேசு கிறிஸ்துவானவரின் சாயலாக மாற்றப்பட வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றார் என்பதை நாம் மறக்கக்கூடாது. (2 பேதுரு 1:4)

இந்தியாவின் மணிப்பூர் பிராந்தியத்திற்காக தொடர்ந்தும் மன்றாடுங்கள். – அதன் சமாதானத்திற்காகவும் சிரமமான காலத்திலும்கூட எமது சகோதர சகோதரிகள் தைரியமாகவும், துணிச்சலோடும் கிறிஸ்துவானவரைப் போல இருக்கும்படியாக மன்றாடுங்கள்.

மேலும், எமது செமினரிகளில் கல்வி கற்கின்றவர்கள், கருணை சகோதரிகளாக பயிற்சி பெருகின்றவர்கள், தூய திருச்சபையின் பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட எமது வாலிப சகோதர சகோதரிகளுக்காக தொடர்ந்தும் மன்றாடும்படியாக கேட்டுக்கொள்கின்றேன்.

தூய திருச்சபை பணியில்,

கிறிஸ்துவுக்குள் உங்கள் தந்தை,



மோரன் மோர் அத்தனேசியஸ் முதலாவது யொஹான் மெற்றோபொலிட்டன் அடிகளார்.

---

**கவனத்தில் கொள்க:** தயவு செய்து இதை உங்கள் பிராந்திய மொழியில் மொழிப்பெயர்த்து, விசுவாசிகளை தைரியப்படுத்தும்படியாக அனைத்து பங்குத்திருச்சபைகளிலும் வாசிக்கும்படியாக செயல்படுங்கள்

**இடம்** : தூய சினட் அலுவலகம்.

**திகதி** : 25ம் திகதி ஜீலை மாதம் 2023